Date :01.08.2018

| | | | |
|---|---|---|---|
| Name | : Justus | Father's Name | : |
| Taluk | : | Village | : |
| Calling | : | Religion | : |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை -

நான் சித்திரங்கோடு, நெடியவிளையில் வசித்து வருகிறேன். நான் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். 1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் ஏற்கனவே முன் விரோம் இருந்து வந்தது. என்ன பிரச்சினை என்று முழுவதுமாகத் தெரியாது . நானும், அ.சா.1ம் நண்பர்களுடன் திருநெல்வேலி சென்றுவிட்டு 23.8.2012 அன்று இரவு 10.30 மணிக்கு சுவாமியார்மடம் பஸ்டாப்பில் இறங்கினோம். அருகில் உள்ள திரிஸ்டார் ஹோட்டலில் சாப்பிட போனோம். நானும், அ.சா.1ம், ராஜகுமார் மற்றும் சதீஷ்குமார் ஆகியோருடன் நான் உள்ளே போக போனோம். எதிரிகள் மூவரும் கடைக்குள் இருந்தார்கள். என்னை பார்த்ததும் நீ என்னை போலீசில் காட்டிக்கொடுத்தாயா உன்னால் எனக்கு ரூ.50,000/- செலவானது என்று சொல்லி 1ம் எதிரி அ.சா.1டம் தகராறு செய்தார். 1ம் எதிரி ஆல்பர்ட் வெட்டுக்கத்தியால் அ.சா.1ஐ வெட்ட வந்தார். அ.சா.1 கையால் தடுத்தார். வெட்டுக்கத்தி கீழே விழுந்தது. பின்னர் 1ம் எதிரி ஆர்பர்ட்டும், 3ம் எதிரி முருகனும் அ.சா.1ஐ இறுக்க பிடித்துக் கொண்டார்கள். இவனை இதோடு செத்து தொலைந்து போ என்று சொல்லி 2ம் எதிரி ராஜேஷ் வெட்டுக்கத்தி எடுத்து அ.சா.1ன் முன்பக்க தலையில் வெட்டினார். அ.சா.1 நிலைத்தடுமாறி கீழே விழுந்தார். அ.சா.1ன் கழுத்தில் கிடந்த 2 பவுன் தங்க செயினை 1ம் எதிரி ஆல்பர்ட் பிடுங்கிச் சென்று கேஸ் செலவிற்கு ஆகும் என்று சொல்லி எடுத்துச் சென்றார். எதிரிகள் மூவரும் அங்கிருந்து ஒரு எமஹா பைக்கில் தப்பிச் சென்று விட்டார்கள். அதன் பதிவு எண் தெரியாது.

அங்கு சத்தம் கேட்டு ஆட்கள் கூடிவிட்டார்கள். அ.சா.1 அங்கிருந்தவர்கள் உதவியுடன் அருகில் உள்ள ரத்னா மருத்துவமனைக்குச் சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை - இல்லை

மறு விசாரணை - இல்லை

Dictated and typed in open court, read over to the witness and admitted to be correct on Wednesday the 1st day of August, 2018.

**Assistant Sessions Judge,**
**Padmanabhapuram.**